# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

***2019 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 20 ஆம் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி***

*(2019.12.20 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*


## விவாக (பொது) (திருத்தம்)

*(தனியார் உறுப்பினர் சட்டமூலம்)*

***1907 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, விவாக (பொது) கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

*பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ (வண.) அதுரலியே ரதன தேரர் அவர்களால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது*


*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது*

---

*கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்*

**விலை : ரூபா *6.00***　　**தபாற் செலவு : ரூபா *15.00***

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**விவாக (பொது) (திருத்தம்)**

**1907 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, விவாக (பொது) கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

சுருக்கப்பெயர்.

**1.** இச்சட்டம், 2019 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, விவாக (பொது) (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் முன்னுரையைத் திருத்துதல்.

**2.** முதன்மைச் சட்டவாக்கத்தின் முன்னுரை இத்தால் பின்வருமாறு திருத்தியமைக்கப்படுகின்றது. முன்னுரையில் “முஸ்லிம்களின் விவாகம் தவிர்ந்த” என்ற பதம் அகற்றப்படுவதாகுக.

நீக்கமும் பேணல்களும்.

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் ஏற்பாடுகளில் ஏதேனும் ஒன்றிற்கோ அல்லது வேறேதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கோ பாதிப்பை ஏற்படுத்தாத வகையில், விவாக (பொது) கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள் நடைமுறையில் இருக்கும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**4.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.